## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| M.C.O.P. No. 76/2016 | Date :05.08.2022 | PW1 |
|---|---|---|
| Name: சிவராஜ் | S/o. கருமாலி | |
| Evidence Recorded Time: 12.25 P.M. to 12.30 P.M. | | |

**1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

விபத்து சமயத்தில் நான்தான் வாகனத்தை ஓட்டிவந்தேன். எனக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை. நான் ஓட்டி வந்த வாகனத்திற்கு இன்சூரன்ஸ் உள்ளது. இன்சூரன்ஸ் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். இன்சூரன்ஸ் நகலை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து சம்மந்தமாக என் அப்பா எந்த ஒரு புகாரும் கொடுக்கவில்லை. நான் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என் அப்பாவை போலீசார் விசாரிக்கவில்லை. நான் தான் அதிவேகமாக வந்து இடித்து இந்த விபத்தினை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. அவர்கள்தான் வந்து இடித்துவிட்டார்கள். மேற்படி 1–ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை தணிக்கை செய்த வாகன ஆய்வாளர் எந்த ஒரு சேதமும் இல்லை என்று அவருடைய கருத்துரையில் தெரிவித்துள்ளார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. இந்த விபத்து என்னுடைய கவனக்குறைவால்தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. 1–ம் எதிர்மனுதாரருக்கு எதிராக எந்த ஒரு நஷ்டஈடும் கோரமுடியாது என்றாலும் 2–ம் எதிர்மனுதாரர்தான் நஷ்டஈடு தரகடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

**2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

**வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.